மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மேட்டூர்
முன்னிலை:திரு.ஆர்.மணிவர்மன், பி.ஏ., பி.எல்., எல்.எல்.எம்.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி, மேட்டூர்
2024 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 01 ஆம் நாள் திங்கள்கிழமை
இ.ம.எண்.01/2023
அ.வ.எண்.141/2017

1. செல்வி
2. ராதா (எ) ராதாகிருஷ்ணன் ... மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

/எதிராக/

1. ராசம்மாள்
2. A.R.மாதேசன்
3. சண்முகம் ...எதிர்மனுதாரர்கள்/வாதிகள்

இம்மனு கடந்த 07.03.2024 ஆம் தேதியன்று இந்நீதிமன்றம் முன்பாக இறுதியான விசாரணைக்கு வரப்பட்டு மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.P.கோபிநாத் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.A.M.C.பெரியசாமி அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதுரை கேட்கப்பட்டும், வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்தும் இதுநாள் வரை எமது ஆய்வில் இருந்து வந்து மேற்படி இம்மனுவில் இந்நீதிமன்றம் வழங்கிடும்.

## உத்தரவு

இம்மனு உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 18 விதி 17 மற்றும் பிரிவு 151 ன் கீழ் குறுக்கு விசாரணை செய்வதற்காக வா.சா.1 ஐ மீண்டும் அழைத்து விசாரிக்க உத்தரவிடக் கோரி மனுதாரர்கள் இம்மனுவினை தாக்கல் செய்துள்ளார்கள்.

1) மனுவின் சுருக்கம் : –

மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கு எதிராக விளம்புகை, நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரங்கள் கோரி எதிர்மனுதாரர்கள்/வாதிகளால் வழக்கு தாக்கல் செய்யப்பட்டு, வழக்கு விசாரணை தொடங்கப்பட்டு, வா.சா.1 ன் முதல் விசாரணை மற்றும் குறுக்கு விசாரணை சாட்சியங்கள் முடிவுற்று, வா.சா.2 ன் முதல் விசாரணை சாட்சியம் அளிக்கப்பட்டு, வா.சா.2 ஐ குறுக்கு விசாரணைக்காக வாய்தா போடப்பட்டுள்ள நிலையில், வா.சா.1 யிடம் குறுக்கு விசாரணையில் சில முக்கியமான கேள்விகள் கேட்காமல் விடுபட்டுவிட்டது. மேற்படி விடுபட்ட சங்கதிகள் தொடர்பாக மேற்படி

வா.சா.1ன் குறுக்கு விசாரணைக்கு பின்னிட்டு தான் மனுதாரர்களுக்கு தெரியவந்தது. மேற்படி சங்கதிகள் மனுதாரர்களின் எதிர்வாதத்தை நிரூபிப்பதற்கு இன்றியமையாதவை என்பதால் அவை தொடர்பாக வா.சா.1யிடம் குறுக்கு விசாரணை செய்யும்பொருட்டு, வா.சா.1ஐ மீண்டும் அழைத்து விசாரிக்க உத்தரவிடக் கோரி மனுதாரர்கள் இம்மனுவினை தாக்கல் செய்துள்ளார்கள்.

<u>2) 2ம் எதிர்மனுதாரால் தாக்கல் செய்யப்பட்டு, 1, 3ம் எதிர்மனுதாரர்களால் ஏற்றுக் கொள்ளப்பட்ட எதிருரையின் சுருக்கம்:</u>

மனு பொய்யானது, மோசடியானது. சட்டப்படிக்கும், நியாயப்படிக்கும் ஏற்புடையதல்ல. கடுமையான நோயால் பாதிக்கப்பட்ட வா.சா.1ஐ வீண் தொந்தவு செய்யும் எண்ணத்துடன் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இவ்வழக்கில் வா.சா.1ஐ கடந்த 27.07.2022ம் தேதியன்று விசாரிக்கப்பட்டுள்ளதால் 15.02.2023க்கு பின்னர் 06.03.2023, 15.03.2023, 20.06.2023, 27.06.2023ம் தேதியன்று முழுவதுமாக வா.சா.1ஐ விசாரித்து முடித்தபின்னர் வா.சா.2 ஆக ஜெயராமன், த/பெ.மலையக்கவுண்டர் என்பவரை வாதிகள் தரப்பில் முதல் விசாரணை செய்த பின்னர் வா.சா.2 ஐ குறுக்கு விசாரணை செய்யாமல் வா.சா.1ஐ மீண்டும் விசாரிக்க மனு செய்துள்ளது சட்டத்திற்கு எதிரான ஒன்றாகும். எனவே வா.சா.1ற்கு பெருத்த கஷ்ட நஷ்டத்தை ஏற்படுத்தும் விதமாக தாக்கல் செய்துள்ள இம்மனுவை தள்ளுபடி செய்ய வேண்டுமென எதிர்மனுதாரர்கள் கூறியுள்ளார்கள்.

3) இருதரப்பு கற்றறிந்த வழக்குரைஞர்களின் மதிப்பிற்குரிய வாதங்கள் கேட்கப்பட்டன. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டன. மனுதாரர்கள் மற்றும் எதிர்மனுதாரர்கள் தரப்பில் சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் ஏதும் முன்னிலைப்படுத்தப்படவில்லை.

<u>4) பிரச்சினை :</u>–

இம்மனு அனுமதிக்கத்தக்கதா? என்பதே ஆகும்.ள

<u>5) பிரச்சினைக்கான தீர்வு:–</u>

(i) மனுதாரர்கள் தரப்பில் மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கு எதிராக விளம்புகை, நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரங்கள் கோரி எதிர்மனுதாரர்கள்/வாதிகளால் வழக்கு

தாக்கல் செய்யப்பட்டு, வழக்கு விசாரணை தொடங்கப்பட்டு, வா.சா.1ன் முதல் விசாரணை மற்றும் குறுக்கு விசாரணை சாட்சியங்கள் முடிவுற்று, வா.சா.2ன் முதல் விசாரணை சாட்சியம் அளிக்கப்பட்டு, வா.சா.2 ஐ குறுக்கு விசாரணைக்காக வாய்தா போடப்பட்டுள்ள நிலையில், வா.சா.1 யிடம் குறுக்கு விசாரணையில் சில முக்கியமான கேள்விகள் கேட்காமல் விடுபட்டுவிட்டது என்றும், மேற்படி விடுபட்ட சங்கதிகள் தொடர்பாக மேற்படி வா.சா.1ன் குறுக்கு விசாரணைக்கு பின்னிட்டு தான் மனுதாரர்களுக்கு தெரியவந்தது என்றும், மேற்படி சங்கதிகள் மனுதாரர்களின் எதிர்வாதத்தை நிரூபிப்பதற்கு இன்றியமையாதவை என்பதால் அவை தொடர்பாக வா.சா.1 யிடம் குறுக்கு விசாரணை செய்யும்பொருட்டு, வா.சா.1 ஐ மீண்டும் அழைத்து விசாரிக்க உத்தரவிடக் கோரி மனுதாரர்கள் இம்மனுவை தாக்கல் செய்துள்ளது தெரியவருகிறது.

(ii) எதிர்மனுதாரர்கள் தரப்பில் கடுமையான நோயால் பாதிக்கப்பட்ட வா.சா.1 ஐ வீண் தொந்தவு செய்யும் எண்ணத்துடன் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், இவ்வழக்கில் வா.சா.1 ஐ கடந்த 27.07.2022ம் தேதியன்று விசாரிக்கப்பட்டுள்ளதால் 15.02.2023க்கு பின்னர் 06.03.2023, 15.03.2023, 20.06.2023, 27.06.2023ம் தேதியன்று முழுவதுமாக வா.சா.ஐ விசாரித்து முடித்தபின்னர் வா.சா.2 ஆக ஜெயராமன், த/பெ.மலையக்கவுண்டர் என்பவரை வாதிகள் தரப்பில் முதல் விசாரணை செய்த பின்னர் வா.சா.2 ஐ குறுக்கு விசாரணை செய்யாமல் வா.சா.1 ஐ மீண்டும் விசாரிக்க மனு செய்துள்ளது சட்டத்திற்கு எதிரான ஒன்று என்றும், எனவே வா.சா.1ற்கு பெருத்த கஷ்ட நஷ்டத்தை ஏற்படுத்தும்விதமாக தாக்கல் செய்துள்ள இம்மனுவை தள்ளுபடி செய்ய வேண்டுமென எதிர்மனுதாரர்கள் எதிர்வாதம் செய்துள்ளது தெரிய வருகிறது.

(iii) வழக்குரையை பரிசீலனை செய்ததில் மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கு எதிராக விளம்புகை, நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரங்கள் கோரி எதிர்மனுதாரர்கள்/ வாதிகளால் வழக்கு தாக்கல் செய்யப்பட்டு, வழக்கு விசாரணை தொடங்கப்பட்டு, வாதிகள் தரப்பில் வா.சா.1ன் குறுக்கு விசாரணை நிறைவுற்ற நிலையிலும், வாதிகள் தரப்பில் வா.சா.2ன் முதல் விசாரணை நிறைவுற்று, குறுக்கு விசாரணைக்காக வாய்தா வைக்கப்பட்டுள்ள நிலையில், வா.சா.1 யிடம் வழக்கின் சில சங்கதிகள் தொடர்பாக

குறுக்கு விசாரணையில் கேள்விகள் கேட்கப்படாமல் விடுபட்டுவிட்டது எனவும், வா.சா.1ன் குறுக்கு விசாரணையின்போது மேற்படி சங்கதிகள் தொடர்பாக மனுதாரர்களுக்கு தெரியவில்லை எனவும், பின்னிட்டு தான் தெரியவந்தது எனவும், அதனால் வா.சா.1ஐ மீண்டும் குறுக்கு விசாரணை செய்ய கோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது தெரிய வருகிறது. அதே சமயத்தில் எதிர்மனுதாரர்கள் தரப்பில் கடுமையான நோயால் பாதிக்கப்பட்ட வா.சா.1ஐ வீண் தொந்தவு செய்யும் எண்ணத்துடன் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், இவ்வழக்கில் வா.சா.1ஐ முழுவதுமாக விசாரித்து முடித்தபின்னர் வா.சா.2ஐ முதல் விசாரணை செய்த பின்னர் வா.சா.2ஐ குறுக்கு விசாரணை செய்யாமல் வா.சா.1ஐ மீண்டும் விசாரிக்க மனு செய்துள்ளது சட்டத்திற்கு எதிரான ஒன்று என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது தெரியவருகிறது.

(iv) இருதரப்பு வாதங்கள் மற்றும் வழக்கு ஆவணங்களை கவனமாக பரிசீலனை செய்கையில், இவ்வழக்கானது நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி வாதிகளால் தாக்கல் செய்யப்பட்டுள்ளதை கருத்தில் கொள்கையிலும், விசாரணை நீதிமன்றத்தில் தான் சாட்சிகளை விசாரிக்கவும், குறுக்கு விசாரணை செய்யவும் தரப்பினர்களுக்கு வாய்ப்பளிக்க முடியும் என்பதாலும், மனுதாரர்களின் எதிர்வாதத்தை நிரூபிக்கும் சுமையானது மனுதாரர்களையையே சார்ந்தது என்பதாலும், மேற்படி வா.சா.1ஐ குறுக்கு விசாரணை செய்யும்பொழுது தற்போது வா.சா.1ஐ மீண்டும் அழைத்து குறுக்கு விசாரணை செய்ய உத்தேசித்திருக்கும் சங்கதிகள் குறித்து மனுதாரர்களுக்கு தெரியவில்லை என்றும் கூறியுள்ளதை கருத்தில் கொள்கையில், மனுதாரர்களுக்கு தங்கள் வாதத்தை நிரூபிக்க ஒரு வாய்ப்பு வழங்குவது நீதியின் நலனுக்கு உகந்தது என்பதாலும், அவ்வாறு எதிர்மனுதாரர்கள் கூறுவதுபோல் விடுபட்ட சங்கதிகளை நிரப்பும் விதத்தில் குறுக்கு விசாரணை கேள்விகள் கேட்கும்பட்சத்தில் இந்திய சாட்சிய சட்டம், 1872, பிரிவு 136ன்கீழ் மேற்படி கேள்விகளின் ஏற்புடைமை குறித்து நீதிமன்றத்தால் தீர்மானிக்கப்படும் என்பதையும், மேற்படி கேள்விகள் குறித்து ஆட்சேபிக்க எதிர்மனுதாரர்களுக்கு வாய்ப்பு உள்ளதையும் கருத்தில் கொள்கையில், எதிர்மனுதாரர்களின் நலனுக்கு எவ்வித பாதகமான சூழலும் ஏற்படாது என்பதை கருத்தில் கொண்டு, முடிக்கப்பட்ட வா.சா.1ஐ மீண்டும் அழைத்து விசாரிக்க கோரி

தாக்கல் செய்யப்பட்டுள்ள இம்மனு அனுமதிக்கத்தக்கது என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது. ஆனால் மனுதாரர்களால், எதிர்மனுதாரர்களுக்கு ஏற்பட்ட காலவிரயத்தை ஈடுசெய்யும் வகையில் மனுதாரர்கள், எதிர்மனுதாரர்களுக்கு ரூ.2000/– செலவுத்தொகையாக செலுத்தும்பட்சத்தில் இம்மனுவினை அனுமதிக்கலாம் என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

முடிவாக, மனுதாரர்கள், எதிர்மனுதாரர்களுக்கு ரூ.2000/–செலவுத்தொகையாக 08.04.2024 க்குள் அளிக்கும் பட்சத்தில் இம்மனு அனுமதிக்கப்படும் என உத்தரவிடப்படுகிறது. அழைக்க 08.04.2024.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு 2024 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 01 ஆம் நாள் இந்த திறந்த நீதிமன்றத்தில் என்னால் அவையறியப் பகரப்பட்டது.

R MANIVARMAN
Digitally signed by R MANIVARMAN
Date: 2024.04.01 15:45:02 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.

மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:– இல்லை

எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:– இல்லை

R MANIVARMAN
Digitally signed by R MANIVARMAN
Date: 2024.04.01 15:45:10 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.